## இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை – 2017

----------------------------------------------------------------------------------------------------

லங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் அதிகாரச் சட்டத்தின் 76(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென தான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் ஒழுங்குபடுத்தல் பேரவை நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் ஒழுங்குபடுத்தல் பேரவை உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் வங்கிக்கு நேரடியாக கிடைத்த 01 மாதத்திற்கும் 06 மாதங்களுக்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்ட ரூபா 29,100 ஆன 04 வைப்புக்கள் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.3 பெற வேண்டிய கணக்குகள்

நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு வியாபாரக் கடன்பட்டோர் மீதி ரூபா 122,289 ஆக இருந்ததுடன் அதில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட பழமையான கடன் மீதி ரூபா 113,689 மற்றும் 03 ஆண்டுகளுக்கும் 04 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட மீதி ரூபா 8,600 ஆக இருந்தது. அது முழுக் கடன்பட்டோரிடமிருந்து ரூபா 113,969 தொகை அரச நிறுவனங்களிடமிருந்து கிடைக்க வேண்டியதாக இருந்ததுடன் அது மொத்த கடன்பட்டோரின் 93.19 சதவீதமாக இருந்தது.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப் பிரமாணம் 110(1) | தொடர்புடைய பிரமாணத்தின் பிரகாரம் நிறுவகத்தின் நட்டங்கள் மற்றும் இழப்புக்கான பதிவு செய்வதற்காக இழப்புக்கள் தொடர்பாக பதிவேடொன்று பேணப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 135(1) | இலங்கை அணு சக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் தலைவரால் நிதிக் கட்டுப்பாட்டு தொடர்பின் செயற்பாடுகள் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு கையளிக்கும் போது அதிகாரமளித்தல், அங்கீகாரமளித்தல், சான்றுறுதிப்படுத்தல் மற்றும் கொடுப்பனவு |

தொடர்பாக ஒவ்வொரு உத்தியோகத்தரினதும் செயற்பாடுகள் ஏனைய உத்தியோகத்தர்கள் ஊடாக பரிசோதனைக்கு உட்படக் கூடிய வகையில் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணான வகையில் அதிகாரமளித்தல் மற்றும் கொடுப்பனவினை உறுதிப்படுத்தல் என்பன 02 கொடுப்பனவு உத்தியோகத்தர்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தன.

| | | |
|---|---|---|
| (ஆ) | 1994 ஜுன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி | பொது நிர்வாக அமைச்சினதோ அல்லது திறைசேரியினால் அனுமதிக்கப்பட்ட நலன்கள் மாத்திரம் நிர்வாக சபையின் அனுமதியுடன் செலுத்த வேண்டும் எனினும் அதற்கு முரணாக பணிப்பாளர் சபை அனுமதியின் பேரில் மாத்திரம் கதிர் பாதுகாப்பு பரிசோதனை நடவடிக்கைகளுக்காக குறித்த உத்தியோகத்தர்களுக்கு முன்னைய ஆண்டின் போது ரூபா 70,780 படிகளாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், கணக்காய்வு அறிக்கை ஊடாக இது அறிக்கையிடப்பட்டிருக்கையில் அது தொடர்பாக கவனம் செலுத்தப்படாமல் மீளாய்வாண்டின் அதற்காக ரூபா 157,420 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது ஒழுங்குபடுத்தல் பேரவையின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 3,102,117 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 973,993 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 2,128,124 தொகையான வீழ்ச்சி தென்பட்டது. வருமானம் ரூபா 9,740,427 ஆல் அதிகரித்த போதிலும் மொத்த செலவினம் ரூபா 11,868,551 ஆல் அதிகரித்தமையால் வீழ்ச்சியேற்பட்டிருந்தது.

இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் மீளாய்வாண்டினதும் கடந்த 02 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்தபோது 2015 ஆம் ஆண்டில் ரூபா 3,479,000 தேறிய இலாபமொன்றாக இருந்ததுடன் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 973,993 ஆக இருந்தது. அது மீளாய்வாண்டின் போது ரூபா 3,102,117 ஆன நட்டமொன்று வரை வீழ்ச்சியடைந்திருந்தது. வரிக்கு முன்னர் நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம் மீளச் சீராக்கம் செய்ததன் பின்னர் ஒழுங்குபடுத்தல் பேரவையின் 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை பங்களிப்பு முறையே ரூபா 11,512,124 தொகை ரூபா 18,904,956 தொகை மற்றும் ரூபா 23,135,332 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

அணுக்கதிரியிக்கலிருந்து நிவாரணம் பெறுதல் மற்றும் சாத்தியமான ஆபத்துகளிலிருந்து நபர்களையும் சுற்றாடலையும் பாதுகாத்தல் மற்றும் தோற்றுவாய்கள் மற்றும் வசதிகளதும் நுளைவு மற்றும் பாதுகாப்பு என்பவற்றிற்குத் பொருத்தமான ஏற்பாடுகளைச் செய்தல், இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை ஏற்படுத்தப்பட்டதன் நோக்கமொன்றாகும்.

மேற்குறித்த நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை 2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின அதிகாரச் சட்டத்தின் 11(ஈ) பிரிவின் பிரகாரம் அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணக்கப்பாட்டை வழங்குவதாகவும் அதிகாரச்சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்படும் பிரமாணங்கள் அல்லது விதிகள் மற்றும் வழங்கப்படும் அனுமதிப்பத்திரங்களில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் முறையாக அமுலாக்கப்படுகின்றதா என்பதும் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 4.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2017 ஒக்தோபர் 04 ஆந் திகதி குழுவினால் ஒழுங்குபடுத்தல் பேரவையின் பாதீட்டினை மிகைக்கும் வகையில் கொள்வனவு செய்வதற்கான ரூபா 645,000 இற்கு 06 கணனிகளுக்கு தேவையான 06 மத்திய செயன்முறை அலகுகள் (CPU) மற்றும் 06 தொடர்ச்சியான சக்தி வழங்கல் அலகு (UPS) என்பவற்றை கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த பொருட்கள் 2017 நவம்பர் 06 ஆந் திகதி நிறுவனத்தினால் கட்டளையிடப்பட்டிருந்ததுடன் 2017 நவம்பர் 16 ஆந் திகதி ஒழுங்குபடுத்தல் பேரவைக்கு வழங்கப்பட்டிருந்தன. ஒழுங்குபடுத்தல் பேரவையினால் அதற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2018 மார்ச் 01 ஆந் திகதி வரையிலும் அந்த 06 கணனிகளை செயற்படுத்துவதற்கு தேவையான ஏனைய தேவையான MS மென்பொருட்கள் மற்றும் வைரஸ் ஒழிப்பு மென்பொருள் இல்லாமையினால் இவற்றை பயன்பாட்டிற்கு எடுக்க முடியாமல் இருந்தன.

## 4.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

2014 இன் 40 ஆம் அணுசக்தி அதிகாரச் சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள பகுதியளவிலான அரச நிறுவனமொன்றான அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் ஊழியர்களின் விடுமுறை தொடர்பாக கடை மற்றும் அலுவலக சேவைகள் ஏற்பாடுகள் பொருந்தும் வர்த்தக ரீதியல்லாத அரசின் பகிரங்க விடுமுறை நாட்களிலும் பதவியணியினர் கடமைகளில் ஈடுபட வேண்டிய போதிலும் 2015 நவம்பர் 02 ஆந் திகதிய பணிப்பாளர் சபையால் வழங்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் வர்த்தக ரீதியற்ற அரசின் பகிரங்க விடுமுறை நாட்களும் சபையின் விடுமுறை நாட்களும் சபையின் விடுமுறை தினங்களாக கருதி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2017 ஆம் ஆண்டில் 04 வர்த்தக விடுமுறையல்லாத அரசின் 04 பகிரங்க விடுமுறை நாட்கள் பேரவையின் விடுமுறையாக கருதி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.

## 4.4 முகாமைத்துவ செயற்பாடுகள்

முன்னைய ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போது பெறுமானத் தேய்வு பூர்த்தி செய்யப்பட்ட வரலாற்று பெறுமதியின் கூட்டுத்தொகை ரூபா 10,798,954 தொகையான 24 சொத்து உருப்படிகள் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வந்த போதிலும் அச் சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு காலத்தின் நியாயமான பெறுமதி கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 பதவியணியினர் நிர்வாகம்

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 41 மற்றும் உள்ளபடியான பதவியணியினர் 29 ஆக இருந்தமையால் சிரேஷ்ட பதவிநிலைத்தரங்களில் ஒரு வெற்றிடமும், மூன்றாம் மட்டத்தில் 02 வெற்றிடங்களும் இரண்டாம் மட்டத்தில் 09 வெற்றிடங்களுமாக சபையில் 12 வெற்றிடங்கள் காணப்பட்டன. இவ்வாறு இரண்டாம் மட்ட பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டமை உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறையொன்றை செயற்படுத்தி நிறுவனத்தின் தவறுகளை குறைப்பதற்கான தடையொன்றாக இருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் 10 செலவின விடயங்களில் உள்ளவாறான செலவினம் பாதிடப்பட்ட அளவினை விட 11 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலும் குறைவடைந்திருந்ததுடன் செலவின விடயமொன்றில் உள்ளவாறான செலவினம் பாதிடப்பட்ட அளவினை விட 11.53 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 5.2 பெறுகைத் திட்டம்

2006 – அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் ஆகக் குறைந்தது 03 ஆண்டு காலப்பகுதிக்காக எதிர்பார்க்கப்பட்ட கொள்வனவு நடவடிக்கைகள் உள்ளடங்களாக பிரதான பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் பேரவையினால் 2017 ஆம் ஆண்டிற்கு மாத்திரம் பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது பேரவையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| | **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்** | **அவதானிப்புக்கள்** |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் முகாமைத்துவம் | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் முறைப்படி மதிப்பீடு செய்யப்படாமை. |
| (ஆ) | பெறவேண்டிய மீதிகள் | பெறவேண்டிய பணத்தை உடனடியாக சேகரிக்கப்படாமை. |
| (இ) | மனிதவள முகாமைத்துலம் | வளங்களை நிறுவகத்தின் நோக்கங்களை அடைந்துகொள்ளும் வகையில் முறையாக முகாமைத்துவம் செய்யப்படாமை. |
| (ஈ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீடு நடைமுறை ரீதியாக தயாரித்து கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தாமை. |
| (உ) | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கைகள் | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கைகள் என்பவற்றுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படாமை |